



thq;f! tzf;fk;!





அருட்சகோதரி.முனைவர் .இ.அல்போன்சாள்
உதவிப்பேராசியை
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம;

# கண்ணதாசனின் இயேசுகாவியத்தில்

# மலைப் பொழிவு

எளிய மனத்தோர் பேறுபெற் றோரென
எடுத்ததும் அவர் சொன்னார்-இதில்
எளிமை என்பது பற்றில் லாமை
இறைவனை நம்புவதே!



துயரம் உறுவோர் பேறுபெற்றோரெ
தூயமகன் சொன்னார் -அந்தத்
துயரம் அடைவோர் ஆறுதல் பெறு
துன்பங்களை எண்ணார்!



சாந்தம் உடையோர் பேறுபெற் றோரெனத்
தத்துவமும் சொன்னார் -இந்தத்
தாரணி முழுவதும் அவர்களுக் குரியது
தலைவர்கள் அவரென்றார்!



நீதியின் பாலே தாகங்கொண் டோரே
பேறுபெற் றோரென்றார்-அவர்
நிறைவே பெற்று முறையாய் வாழ்பவர்
அறமே தலையென்றார்!




இரக்கம் உடையோர் பேறுபெற் றோரென
இயேசுபிரான் சொன்னார்-அவர்
இரக்கம் காட்டி இரக்கத்தைப் பெறுவர்
இதுதான் பரிசென்றார்!




# 6

தூயமனத் தோர் பேறுபெற் றோரெனத்
தூயமகன் சொன்னார்-அவர்
தோன்றும் கடவுளை நேரில் காண்பார்
சொர்க்கம் வருமென்றார்!




7

அமைதி கொடுப்போர் பேறுபெற் றோரெனஅன்புமகன் சொன்னார்- இங்கு ஆண்டவன் பெற்ற பிள்ளைகள் எல்லாம் அவர்கள் தானென்றார்!



நீதிக் காகத் துன்பம் உறுவோர்
பேறுபெற் றோரென்றார் -அவர்
நேரே அடைவர் விண்ணர சென்றே
நிச்சயமாய்ச் சென்னார்!



ed;wp! tho;f!


©Birgitta de Jonge


©Birgitta de Jonge


©Birgitta de Jonge


©Birgitta de Jonge